முருகப்பெருமான் துணை

**மகான் முத்தானந்தர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**18.08.2023**, வெள்ளிக்கிழமை

1. தேவரீர் வாழுகின்ற ஞான சபை
தேசிகன் ஆளுகின்ற பிரணவ சபை
அவதாரம் எடுத்து உலகநலமுற
அன்னதானம் நடக்கும் தரும சபை
2. சபையாம் பிரணவக்குடில் நோக்கி
சகலரும் வருகை கண்டிட
அபயமென அவரவர்க்கும் ஞானமுடன்
அழியாமை உண்டெனக் கூறி
3. கூறியே அறிவுரை ஆசிதனை
குறைவிலா சோபகிருது யாளிதிங்கள்
தெரியவே ஏக திகதி புகர் வாரம்
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் முதல் நாள், 18.08.2023, வெள்ளிக்கிழமை)
தெரிவிப்பேன் முத்தானந்தர் யானும்
4. யானுமே அரங்கன் அவதார
உயர்நோக்கம் வெற்றி காண
ஞானயுக மாற்றம் கண்டிட
நம்பிக்கைதரும் வழிமுறை உரைப்பேன்
5. உரைக்கவே குருவருள் எனும்
உயர்பலம் அடைந்திட முதலில்
மறைபோற்றும் அரங்கன் வாழ்
மாதவம்நிறை பிரணவ குடிலுக்கு
6. குடிலுக்கு வருகைதர வேணும்
குருவாக குருபரனும் அருளும்
குடிலதனில் அனுகி சரணாகதி
குறைவிலா கண்டு வர

7. வருவதுடன் அரங்கன் திருவடி
வணங்கி மகா மந்திர
திருவருள் தரும் தீட்சை ஏற்று
தெரிவிப்பேன் பூசைமுறை செய்ய வேணும்

8. வேண்டி அரங்கன் தரும்
வினை வெல்லும் அருளமுது
உண்டுமே அவை தருமம்வளர
உண்மைபட பொருளுதவி செய்து

9. செய்து தானும் தருமனே என
சேவைதனில் கலந்து இணைந்து
அய்யமற சர்வமும் நீயே என
அரங்கன்தனை இறுகப் பற்ற

10. பற்றவே பந்தபாசக் கட்டு விலகும்
பரிபக்குவ நிலை கூடும்
மாற்றம் மெய்ஞானவழியாக
மாயை அனைத்தையும் கடந்து

11. கடந்து தானென்ற அகந்தை
கர்வமும் விலகி இனிதே
சுடரோன் சுப்பன் ஞானமும்
சூழ்ந்து கலந்து ஞானியாக நேரும்

அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—